**கவனிக்க.-** *2024.05.22 ஆந் திகதிய 2386 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இவ்வார வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்டத்தின் நீதாசன வலயங்களுக்கான யூரிமார் பெயர்ப் பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2387 - 2024 මැයි මස 31 වැනි සිකුරාදා - 2024.05.31

*2387 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 588 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | 591 |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | | | |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2024, யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## அம்பாந்தோட்டை மாநகர சபை

*மாநகர சபையின் நிறைவேற்றப்பட்ட துணைச் சட்டம்*

*அம்பாந்தோட்டை மாநகர சபையினால் 29.11.2023 அன்று நடைபெற்ற நிதி மற்றும் கொள்கைக் குழுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 2023/11/29/346 கீழ் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.*

எம்.ஜி.ஜி.ஜி. ரந்திக
*மாநகர ஆணையாளர்,*
*அம்பாந்தோட்டை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*அம்பாந்தோட்டை.*
*2023, நவெம்பர் 29.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை துணை ஏற்பாடுகள் சட்டத்தில் 02வது அத்தியாயத்தில் (1)வது அத்தியாயத்தின் (அ) பந்தியுடன் வாசிக்க வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனம் (நிறைவேற்றப்பட்ட துணைச் சட்டம்) சட்டத்தின் 02வது அத்தியாயத்தில் (01) வது அத்தியாயத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி நிர்வாக பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப தென் மாகாண சபையின் முதலமைச்சரும் மாகாண நிர்வாக பொறுப்பான அமைச்சருமான குஸ்திஞ்ஞா வடு ஷான் விஜயலால் டி சில்வா அவர்களினால் வரைவுகள் 2013, மே மாதம் 17ஆம் திகதி இலக்கம் 1811 கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாநகர சபை நிறைவேற்று துணை சட்ட தொகுப்பு நெறிமுறையுடன் வாசிக்க வேண்டிய 2015, திசெம்பர் மாதம் 4 ஆம் திகதி இலக்கம் 1944 கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் 12 -159 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படாத xi மற்றும் xxiv ஆம் பகுதிகளில் உள்ளடக்கப்பட்ட துணைச் சட்டம் அம்பாந்தோட்டை மாநகர சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும் அத்துடன் அது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறைவேற்றுத் துணைச் சட்டம் அம்பாந்தோட்டை மாநகர சபை எல்லை பிரதேசத்தினுள் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் அம்பாந்தோட்டை மாநகர சபையினால் முன்மொழியப்பட்டது.*

*05-280*

---

## தும்பனே பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*தும்பனே பிரதேச சபையின் ஆளுகைப் பிரிவுக்குள் தும்பனே பிரதேச சபையின் மூலம் நடாத்திச் செல்லப்பட்டு வரும் வீதிகள் / பாதைகள் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கைகளைப் பேணி வருவதற்கென 2024.01.01 ஆந் திகதி முதல் 2027.12.31 ஆந் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டுள்ள காலம் எனக் கருதுவதற்காக 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளதனால் அதற்கமையப் பின்வரும் அட்டவணையில்*

விபரிக்கப்பட்டுள்ள பாதைகள் /வீதிகள் தும்பனே பிரதேச சபையினால் நடத்திச் செல்லப்படும் பாதைகள் /வீதிகள் எனக் கருதுவதென 2023.12.18 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவக் கமிட்டியின் 2024.03.19 ஆந் திகதி 1364 ஆம் இலக்கம் கொண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதனால் அதற்கான எதிர்ப்புகள் இருப்பின் மேற்குறித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையச் செயற்படுமாறு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

டப்ளிவ். ஏ. எல். ரீ. ஜயரத்ன,
செயலாளர்,
தும்பனே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கலகெதர.
2024 மாச்சு 31.

| தொ. இல. | பாதையின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஆரம்ப இடம் | முடிவு | இடதுபுறம் | வலதுபுறம் | நீளம் | அகலம் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | கலகெதர எகொட வத்த பாதை | 301 கலகெதர மேற்கு | கலகெதர ரம்புக்கன வீதியில் மத்திய மாகாண பிரதான கூட்டுறவுச் சங்கத்தின் எதிரில் தொடங்கி | திருமதி ஆர். எம். சீதா என்பவர் உரிமை கோரும் காணி தொடங்கும் இடம் | 1.திலக்ஷி விஜேசேகர 2.ஏ. எம்.ரீ. எச். மெத்தானந்த 3.நிஷாந்தி பெரேரா 4.கே.டி. எஸ். செனவிரத்ன 5.கே. டி. எஸ். செனவிரத்ன 6.அத்தநாயக்க 7.டி.பீ. விஜேகோன் 8.எஸ்.எஸ். எஸ். ரத்நாயக்க 9.எச். ஜீ. பாலித்த 10.பெரேரா 11.மஹேஷ் போகஹவத்த 12.கசுன் ஏக்கநாயக்க 13.கிங்ஸ்லி ரத்நாயக்க 14.சாமளீ கௌஷல்யா 15.ரத்நாயக்க 16.செனவிரத்ன 17.டக்லஸ் 18.ஜீ. கே. செல்லஹேவா 19.வசந்த | 1. ஈ. எம். ஐ. பி. கீர்த்திசிங்ஹ 2. பி. டப்ளிவ். எம். பண்டார 3. ஏ. எம். எஸ். பி. அத்தநாயக்க 4. அதுல நவரத்ன 5. ஏ. ஜீ. விஜேபால 6. எச். பி. வீரசேகர 7. மஹேஷ் போகஹலந்த 8. கசுன் ஏக்கநாயக்க 9. சரத் கருணாரத்ன 10.விமலா விஜேவர்தன 11.கே. பி. அளஹகோன் | 486.7 மீற்றர் | 3.0 மீற்றர் முதல் 4.5 மீற்றர் அளவில் | 2023 |

05-291

## மத்திய நுவரகம் பலாத பிரதேச சபை

திருத்தம்

*மத்திய நுவரகம் பலாத பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் வரிப்பணச் சொத்து மீதான வரிப்பண வரி சதவீதத்தினை விடயப் பொறுப்பு அமைச்சரின் அனுமதியுடன் பிரசுரிப்பது தொடர்பாக 2024.01.26 ஆந் திகதி வெளியான இல. 2369 வர்த்தமானிப் பத்திரிகையின் 01-454 அறிவித்தல் கீழ் வரும் வகையில் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.*

### மத்திய நுவரகம் பலாத பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் வரிப்பணச் சொத்து மீதான வரிப்பண வரி சதவீதத்தினை அறிவித்தல்

*மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும், செயற்பாடுகளினை நிறைவேற்றும் மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் செயலாளர் என்.ஜீ.எம்.புஸ்பகுமாரி ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 134(1) உப பிரிவின் மூலமான எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மத்திய நுவரகம் பலாத பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்திற்குள் வரிப்பணச் சொத்துக்கள் மீதான நூற்றுக்கு ஐந்து(5%) ஆன வரிப்பணப் பண வரியினை விதித்து அறவிடுவதற்கு வட மத்திய மாகாண கௌரவ ஆளுநரது அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளமை பற்றி இத்தால் அறிவிக்கின்றேன்.*

என்.ஜீ.எம்.புஸ்பகுமாரி,
செயலாளர் மற்றும் அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும்,
செயற்பாடுகளினை நிறைவேற்றும் உத்தியோகத்தர்,
மத்திய நுவரகம் பலாத பிரதேச சபை,
எலயாபத்துவ.

### விடயப் பொறுப்பு அமைச்சரது கட்டளை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க படியான பிரதேச சபை சட்டத்தின் 9(3) பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 134(1) உப அட்டவணையில் செயலாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் அமைந்திருக்கும் சொத்துக்கள் மீது வருடாந்த மதிப்பில் 5(%) வருடாந்த வரியினை விதித்து அறவிடுவதற்காக கிழக்கு துவரகம் பலாத பிரதேச சபையின் அதிகாரத்தினை செயற்படுத்தும் செயற்பாடுகளை நிறைவேற்றும் கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபையின் செயலாளர் என்.ஜீ எம்.புஸ்பகுமாரி கொண்டு வந்துள்ள தீர்மானம் அனுமதிக்கப்படுகின்றது.*

மஹீபால ஹேரத்,
ஆளுநர்,
மாகாண உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர்,
வடமத்திய மாகாணம்,
அநுராதபுரம்.

05-291

# நானாவித அறிவித்தல்கள்

## நகராட்சி மன்றம் திருகோணமலை

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் 2024.04.26 ஆந் திகதிய செயலாளரின் 2024/04/26/297 ஆம் இலக்க கூட்டத் தீர்மானம் மற்றும் 2024.03.28 ஆந் திகதிய 2024/03/28/284 ஆம் இலக்க கூட்டத் தீர்மானம் படி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2024 ஆம் ஆண்டுக்காக நாளாந்த திண்மக் கழிவகற்றல் கட்டணம் மற்றும் 6000L கழிபவுசருக்கான திரவ கழிவகற்றல் கட்டணங்களினை பின்வருமாறு அறவிடுவதற்கு திருகோணமலை நகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது.

## சூழல் பாதுகாப்பு மேலதிக திண்மக் கழிவகற்றல் தனியார் நிறுவனம்/அரச நிறுவனம் - 2024 சேவைக் கட்டணம்

குறித்த சேவை கட்டணம் திண்மக்கழிவுகளின் அளவு எரி பொருள் மற்றும் ஏனைய செலவுகள் ஊழியர்களுக்கான ஊதியம் என்பவற்றுக்கு அமைய 4000 முதல் 12000 வரையான தொகையாக அறவிட தீர்மானிக்கப்படுகின்றது. இதன் படி ஏற்கனவே தை மாதம் 01.01.2004 ஆந் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தொகை மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் மாற்றம் செய்யப்பட்ட கட்டணத்தொகை 2024 தை மாதம் முதல் செலுத்தப்பட வேண்டும்.

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் 2024.04.26 ஆந் திகதிய செயலாளரின் 2024/04/26/297 ஆம் இலக்க கூட்டத் தீர்மானத்தின் படி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2024 ஆம் ஆண்டுக்காக 6000 L திரவ கழிவகற்றல் பவுசருக்கான கட்டணத்தை பின்வருமாறு அறவிடுவதற்கு திருகோணமலை நகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது.

**நகரத்திற்குள்**

| | | |
|---|---|---|
| 1. | பாடசாலை வணக்கத் தலங்களுக்கு | ரூ. 6750.00 |
| 2. | வீடுகள் | ரூ. 8250.00 |
| 3. | அரச திணைக்களங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள், ஹோட்டல் | ரூ. 15000.00 |
| 4. | கழிவு நீர் அகற்றல் கட்டணம் | ரூ. 10500.00 |

**நகரத்திற்கு வெளியே**

| | | |
|---|---|---|
| 1. | பாடசாலை வணக்கத் தலங்களுக்கு | ரூ.6750.00 |
| 2. | வீடுகள் | ரூ.9000.00 |
| 3. | அரச திணைக்களங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள், ஹோட்டல் | ரூ.18000.00 |
| 4. | கழிவு நீர் அகற்றல் கட்டணம் | ரூ.10500.00 |

நான்காம் கட்டைக்கு அப்பாலுள்ள இடங்களுக்கு இக் கட்டணங்களுடன் மேலதிகமாக ரூ. 5000.00 (1km) எரிபொருட் செலவு அறவிடப்படும்.

வெ. இராஜசேகர்,
செயலாளர்,
நகராட்சி மன்றம்
திருகோணமலை.

05-316